மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 264, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

264—

அரசு விழா

*45588—**திரு. சு. குணசேகரன்:**

மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்த் தூதர் தனிநாயகம் அடிகளார் நூற்றாண்டு விழாவினை அரசு விழாவாக நடத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்த் தூதர் தனிநாயகம் அடிகளார் அவர்களின் நூற்றாண்டு விழாவினை அரசு விழாவாக அறிவிக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு திரு. சு. குணசேகரன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் முனைவர் வைகைச்செல்வன் அவர்கள்.

முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாசமுள்ள பார்வையிலே கடவுள் வாழ்கிறார், அவர் கருணை உள்ள நெஞ்சினிலே கோயில் கொள்கிறார்" என்று சொல்வார்கள். அந்தக் கருணையின், கடவுளாகத் திகழ்கிற

2014 ஜூலை 25]

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம், மனம்போன போக்கெல்லாம் போக வேண்டாம், மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம்," என்று தமிழ்கூறும் நல் உலகத்திற்கு எடுத்துரைத்த ஔவையாக வாழ்ந்தவர், நாடக உலகின் நாடகக் காவலர் அவ்வை டி.கே சண்முகம் அவர்கள். அவ்வை டி.கே சண்முகம் அவர்களுடைய நூற்றாண்டு விழாவை அரசு விழாவாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கொண்டாடுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விழைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம் தாய்த் திருநாட்டை தலைநிமிரச் செய்திட்ட தமிழகத்தின் அறிவுச் செம்மல்களைப் பெருமைப்படுத்துவதிலும், நாட்டிற்காகத் தங்கள் உயிரையும் துச்சமென மதித்துப் போரிட்டு வீர மரணமடைந்த வீரர்களின் தியாகங்கள் மற்றும் அவர்களது வீரதீரச் செயல்கள் மக்களின் மனதில் நிலைத்துநிற்கும்வகையிலும், அவர்களது புகழ் என்றென்றும் நிலைக்கும்வகையில், நினைவு மண்டபங்கள், நினைவுச் சின்னங்கள் அமைத்து கௌரவப்படுத்துவதிலும், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நிகர் இவ்வுலகில் வேறு எவரும் இல்லையென்று சொன்னால், அது மிகையாகாது. (மேசையைத் தட்டும் ஒலி)*

தமிழச் சான்றோர்களுக்கும், சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கும், தியாகச் செம்மல்களுக்கும் விழா எடுத்து பெருமைப்படுத்துவதில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு ஈடு இணை இவ்வுலகில் எவரும் இல்லை. அதுமட்டுமின்றி, சென்னையிலே அன்னை தெரசா நூற்றாண்டு விழா 8-4-2012 அன்றும் மற்றும் தென்னிந்தியத் திரை உலகின் முதல் பெண் இயக்குநரும், முதல் பெண் திரைப்படத் தயாரிப்பாளருமான திருமதி டி. இராஜலட்சுமி அவர்களின் நூற்றாண்டு விழா 19-9-2013 அன்றும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா

அவர்கள் உத்தரவிற்கிணங்க சிறப்பாகக் கொண்டாடப்பட்டன. தற்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியிருக்கின்ற திரு. அவ்வை டி.கே. சண்முகம் அவர்களது நூற்றாண்டு விழா குறித்து மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களது கனிவான பார்வைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.

திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்த் தூதர் தனிநாயகம் அடிகளாரின் பூர்வீகம் தமிழகம்தான். இவர் இறைப்பணிக்காகத்தான் இலங்கைக்குச் சென்றார். இவர் பல வெளிநாடுகளுக்குச் செல்கின்றபோது அங்கெல்லாம் தமிழ்மொழி பரவாமல் உள்ளதை உணர்கிறார். அமெரிக்காவில் அவர் பி.லிட். படிக்கின்றபோதுதான் தமிழ் மொழியின் தொன்மையைக் காண்கின்றார். இவர் 1948 முதல் அமெரிக்கா உள்ளிட்ட வெளிநாடுகளில் 1,500 முறைக்கு மேலாக தமிழ் மொழியின் பெருமையைப் பற்றி சொற்பொழிவாற்றியிருக்கிறார். முதல் உலகத் தமிழ் மாநாடு அன்றைய சூழ்நிலையில் மலேசியாவிலும், சென்னை உள்ளிட்ட 5 உலகத் தமிழ் மாநாடுகள் இவரது தலைமையில்தான் நடைபெறுகின்றன. உலக ஆராய்ச்சி மையத்திற்குச் சென்று சமஸ்கிருதத்திற்குமுன் மூத்த, தொன்மையான மொழி தமிழ் மொழிதான் என்பதை நிரூபித்துள்ளார். தற்போது தனிநாயகம் அடிகளார் அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டு வருகிறது. தமிழின் பெருமையை, தமிழரின் பெருமையை உலகிற்கு அறியச் செய்கின்ற அரிய பல சிறப்பான திட்டங்களைத் தீட்டி வரும் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், அவரது நூற்றாண்டு நிறைவு விழாவை அரசு விழாவாகக் கொண்டாடவும், அவருக்கு திருநெல்வேலியில் மணிமண்டபம் ஏற்படுத்திப் பெருமை சேர்த்திடவும் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

2014 ஜூலை 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐரோப்பாவில் பிறந்து கிறிஸ்துவ மறையைப் பரப்புவதற்காகத் தமிழகத்திற்கு வந்து தங்கள் வாழ்க்கையைத் தமிழ் மொழிக்காக அர்ப்பணித்து தமிழுக்குத் தொண்டாற்றிய கிறிஸ்துவ குருமார்கள் பலர் உண்டு. ஜி.யு. போப், ராபர்ட் கால்டுவெல், வீரமாமுனிவர், ரோக்லி, ஜீகன்பால்க் போன்றோரின் தமிழ்த் தொண்டினை இன்றைக்கும் தமிழ்கூறும் நல்லுலகம் நினைத்துப் போற்றுகிறது. அதேபோல, யாழ்ப்பாணத்து அருட்பணியாளரான சேவியர் தனிநாயகம் அடிகளார் ஆற்றிய தமிழ்ப் பணியும், அவரது ஆற்றலும் நம்மை வியக்க வைக்கிறது. ஈழத்தில், யாழ்ப்பாணத்தை அடுத்த நெடுந்தீவில் 2-8-1913-ல் பிறந்தார். கொழும்பில் தத்துவவியல் பயின்று, பின்னர் ரோம் மாநகரில் இறையியல் படித்து 1938-ல் கத்தோலிக்கக் குருவானார். 1940 முதல் 1945 வரை திருநெல்வேலி மாவட்டம், வடக்கன்குளம் புனித தெரசா உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராகப் பணிபுரிந்தார். பின்னர் மலேசிய பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகவும் பல ஆண்டுகள் பணியாற்றினார். ஐக்கிய அமெரிக்கா, தென் அமெரிக்கா, கனடா, ஜெர்மனி, இத்தாலி, பிரான்ஸ் போன்ற பல நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டு தமிழ் மொழி, தமிழர் வரலாறு, தமிழ்ப் பண்பாடு குறித்த ஆய்வுக் கட்டுரைகளை முன்வைத்தும், உரைகளாற்றியும் உலகெங்கும் தமிழ் மொழியைப் பறைசாற்றிய பெருமைக்குரியவர் தனிநாயகம் அடிகளார். தமிழ் மொழி குறித்த கருத்துரைகளை வழங்குவதோடு மட்டுமல்லாமல், உலகெங்கும் உள்ள தமிழறிஞர்களையும், தமிழர்களையும் ஒருங்கிணைக்க பல வழிகளில் முன்முயற்சிகளை மேற்கொண்டார். தமிழ்மொழி குறித்து தொடர் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு தமிழறிஞர்களை இணைத்து முதல் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டை மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் 1966-ல் மிக எழுச்சியோடு நடத்திய பெருமைக்குரியவர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டை 1968-ல் சென்னையிலும், 1970-ல் மூன்றாவது மாநாட்டை பாரிசிலும், 1974-ல் நான்காவது மாநாட்டை யாழ்ப்பாணத்திலும் நடத்தியவர். 1980-ல் மதுரையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டிற்கு சில மாதங்களுக்கு முன்பு

செப்டம்பர் 1-ல் இயற்கை எய்தினார். ஆங்கிலம், லத்தீன், பிரெஞ்சு, ஸ்பானிஷ், ஜெர்மன் போன்ற 14 மொழிகளில் புலமை பெற்றவராகத் திகழ்ந்துள்ளார். அதனால்தான் தமிழ் மொழியின் சிறப்புகளை அவரால் திறம்பட எடுத்தியம்ப முடிந்துள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவுக்கிணங்க, தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பாக, பேராசிரியர் தனிநாயகம் அடிகளாருடைய நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் சிறப்புக் கருத்தரங்கம், 24-12-2013-ல் நடத்தப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் செல்லப்பட்டு கனிவோடு பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 265, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

265—

பொது நூலகம்

***32665—திரு. பி.கே. வைரமுத்து:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் தொகுதி, கீழாநிலைக்கோட்டையில் பொது நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தொகுதிக்கு உட்பட்ட கீழாநிலைக்கோட்டையில் பகுதிநேர நூலகம் திறப்பதற்கு வாடகை இல்லா இலவசக் கட்டடமும்,